NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 22 May 2018

# ரத்தப் புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்துக்கான தேடுதலில் முன்னேற்றம்



மாற்று அறுவை சிகிச்சைக்காக ரத்த உயிரணுக்களை உருவாக்கும் புதிய மூலக்கூறைக் கண்டுபிடித்துள்ள சிங்கப்பூர் குழு. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

ரத்தப் புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்தைத் தேடும் முயற்சியில் சிங்கப்பூரைச் சேர்ந்த ஐந்து ஆராய்ச்சியாளர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

ரத்தப் புற்றுநோய் போன்ற நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க உயிரணுக்களை மேலும் பயன்தரும் வகையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இவர்கள் காட்டியுள்ளனர். இந்த ஐந்து ஆராய்ச்சியாளர்களும் சிங்கப்பூர் தேசிய புற்றுநோய் மையம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், டியூக்–என்யுஎஸ் மருத்துவப் பள்ளி, சிங்கப்பூர் பொது மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள். தொப்புள் கொடியிலிருந்து எடுக்கப்படும் உயிரணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆய்வுக்கூடத்தில் உருவாக்கப்படும் செயற்கை ரசாயன வகை ஒன்றைப் கண்டுபிடித்துள்ளதாக ஆராய்ச்சிக் குழு தெரிவித்தது.

தற்போது உயிரணுக்களின் அளவு குறைவாக இருப்பதால் நோயாளிகளால் விரைவில் குணமடைய முடியவில்லை. இந்த நிலையைப் புதிய கண்டுபிடிப்பு மாற்றும் என்று ஆராய்ச்சிக் குழு கூறியது. குணமடைய எடுத்துக் கொள்ளப்படும் நேரம் அதிகமானால் கிருமித் தொற்று ஏற்படும் அபாயம் நிறைய உள்ளது. அதுமட்டுமல்லாது, குணமடைய எடுத்துக்கொள்ளப்படும் நேரம் குறைந்தால் சுகாதாரப் பராமரிப்புச் செலவும் குறையும் என்று ஆராய்ச்சிக் குழு கூறியது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.